LIBRARY
12 OCT 2011
Eastern University, Sri Lanka.

# Eastern University, Sri Lanka
## Faculty of Commerce and Management
## (External Degree)
## First Examination in BBA 2007/2008 & B.Econ 2008/2009
## (Proper/ Repeat) May 2011
## EXB / EXE 1074 Economic Theory

எல்லா வினாக்களுக்கும் விடை தருக. நேரம்:-03 மணித்தியாலம்

01. a). “அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினை என்பது அருமையான வளங்களைப் பயன்படுத்தி எத்தனை, எவ்வளவு உற்பத்தி செய்வது என்பதிலும் பார்க்க, உற்பத்தி செய்யப்பட்டவை எவ்வாறு பங்கிடப்படுகின்றன என்பதாகவே அமைகிறது”

i. இக் கூற்றினை ஏற்றுக்கொள்கிறீரா?

ii. இப்பிரச்சினையை தீர்ப்பதில் வெவ்வேறு பொருளாதார முறைமைகள் எவ்வாறு செயற்பட்டு வருகின்றன என்பதை விளக்குக.

(10 புள்ளிகள்)

b). சிற்றினப் பொருளியலை பேரினப்பொருளியலில் இருந்து வேறுபடுத்திக் காட்டுக.

(05 புள்ளிகள்)

c). உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் உற்பத்திக் காரணிகளை வகைப்படுத்தி, அவற்றின் இயல்புகளை தனித்தனியே குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02. a). எண்ணலளவுப் பயன்பாட்டு ஆய்வின் (Cardinal Utility) அடிப்படையில் குறைந்து செல்லும் எல்லைப் பயன் விதியை அட்டவணை, வரைபு என்பவற்றைப் பயன்படுத்தி விளக்குக.

(05 புள்ளிகள்)

b). குறைந்து செல்லும் எல்லைப்பயன் ஆய்வின் உபயோகம் மற்றும் நடைமுறைப் பிரயோகம் (Uses and applications) என்பனவற்றை சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

c). "விலை அதிகரித்தால் கேட்கப்படும் அளவு வீழ்ச்சியடையும்"

"கேள்வி அதிகரித்தால் விலை உயரும்"

மேற்குறிப்பிட்ட இரண்டு கூற்றுக்களையும் வரைபடத்தின் உதவியுடன் தனித்தனியே விளக்குக.

(05 புள்ளிகள்)

d). குறித்த பண்டமொன்றின் வழங்கலை (Supply) தீர்மானிக்கும் காரணிகளைப் பட்டியலிடுக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03. a). i. வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சியை வரையறு த்துக் கூறுக.

ii. அதனை எவ்வாறு கணிப்பிடுவீர்?

iii. வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி வேறுபாட்டிற்கேற்ப பண்டங்களின் இயல்புகளை எவ்வாறு வேறுபடுத்தலாம்?

(06 புள்ளிகள்)

b). " குறுங்கால உற்பத்தித் தொழிற்பாட்டு விளக்கத்தில் சராசரி உற்பத்திக் கோட்டின் அதி உச்சப்புள்ளியை எல்லை உற்பத்திக் கோடானது வெட்டிச் செல்லும்" வரைபடத்துடன் இக் கூற்றை விளக்குக.

(05 புள்ளிகள்)

c). செலவுக் கோட்பாடு தொடர்பாக பின்வருவனவற்றை வரையறுத்துக் கூறுக, (வரைபடத்துடன்)

i. சராசரி நிலையான செலவு (AFC)

ii. சராசரி மாறும் செலவு (AVC)

iii. சராசரிச் செலவு (AC)

iv. எல்லைச் செலவு (MC)

(04 புள்ளிகள்)

d). தனியுரிமைச் சந்தை அமைப்பினைச் சுருக்கமாக விளக்கி அதன் நன்மை தீமைகளை தருக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

04. a). பிரதான பேரினப் பொருளியல் மாறிகளைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

b). இரண்டு துறைகளைக் கொண்ட எளிய ஒரு பொருளாதாரத்தின் வருமான வட்டப் பாய்ச்சலை (Circular flow of income ) தருக

(05 புள்ளிகள்)

c). ஒரு பொருளாதாரத்தின் மொத்தக் கேள்வியையும் (Aggregate demand) மொத்த நிரம்பலையும் (Aggregate Supply) வேறுபடுத்தி விளக்குக.

(05 புள்ளிகள்)

d). ஒரு பொருளாதாரத்தின் சமநிலை மட்டத் தேசிய வருமானம் என்றால் என்ன? **உதாரணம்** தந்து விளக்குக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

05. சிறுகுறிப்பு எழுதுக.

a). வணிக வங்கிகளின் பிரதான தொழிற்பாடுகள்

b). பணத்திற்கான கொடுக்கல் வாங்கல் நோக்கக் கேள்வி

c). சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு

d). நாணயமாற்று வீதம்

(20 புள்ளிகள்)